உஷா

24.6.13

# பிரச்சினைக்கான தீர்வுகள்

## வாழ்க்கையில் உண்டானது
## ஆன்மீகம் சொல்வது

மனிதன் பெற வேண்டிய அறிவை அனுபவமாக வாழ்வு தருவதை நாம் பிரச்சினை என்கிறோம். ஒருவருக்குப் பிரச்சினையான விஷயம் அடுத்தவருக்குப் பிரச்சினையாவதில்லை. அனைவருக்கும் பிரச்சினையானது ஒருவருக்குப் பிரச்சினையாவதில்லை. எவரும் பிரச்சினையாக உணராதது ஒருவருக்குப் பிரச்சினையாகிறது. ஒருவருக்குப் பெரிய பிரச்சினை அடுத்தவர்க்கு பெரிய வாய்ப்பு. "எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டிய அவசியமில்லை" என பகவான் கூறுகிறார். வாழ்வு உள்ளபடி நாம் வாழ்ந்தால் பிரச்சினை எழாது. ஆசைப்பட்டால் பிரச்சினை வரும். பேராசைப்பட்டால் பெரிய பிரச்சினை வரும். இல்லாததைப் பெற முயன்று வெற்றி பெற்றால் முன்னேற்றம் வரும். தோற்றால் திறமை அனுபவம் வரும். முயல்வது சரி. தவறல்ல. ஒரு சாதாரண பிரச்சினைக்கு வாழ்வு பலருக்குப் பல விஷயங்களைக் கூறும். ஆன்மீகம் அதன் வழி அனந்தமான ஞானம் முழுவதும் தர முயலும். வீடு கட்டுவது பெரியது. வாடகைக்குப் போவது சிறியது. இது உலகெங்கும் உண்டானது. இவற்றின் மூலம் பலதரப்பட்ட அன்பர்கட்கு வாழ்வும், ஆன்மீகமும் கூறுபவற்றை எழுதினால் (கட்டுரை) சொற்பொழிவு நிறைவு பெறும். முழு நூலாகவும் எழுதலாம். 1945இல் போர் முடிந்தபின் இன்று வரை வாழ்ந்த ஒருவர் வாழ்வில் இதைக் கருதினால் (development literature) சுபீட்ச இலக்கியம் வாழ்வில் கோடிட்டுக் காட்டும். அதையே நாட்டு அனுபவம், உலக அனுபவமாக எழுதினால் இதுவரை எழாத பேரிலக்கியம் அடிப்படையில் உருவாகும். அந்த வயதில் பிரச்சினையானது இந்த வயதில் பிரச்சினையாகாது, வாய்ப்பாகவுமாகும். வாழ்வில் சூட்சுமங்களை அறிய முயல்பவர் பல்வேறு கட்டங்களில் வெற்றி பெறுவதுண்டு.

அவர் வாழ்வு, மனம், கண்ட சூத்திரம். அதற்குரிய அனுபவம் பெரும் கதைகளைக் கூறும். எழுதுபவர் எழுதினால் எழுத்தே ஊரைத் தட்டி எழுப்பி புரட்சியை மலர்ச்சியாக மாற்றி பெரும் மாறுதல்களைக் கொண்டு வரும். அன்பர்கள் அன்னையை பல நிலைகளில் அறிந்தவர். அன்னையின் கோணத்தில் வாழ்வை பத்து ஆண்டு புரிய முயன்றால் இதுவரை உலகம் கண்டதை ஓர் அனுபவத்தில் அறியலாம். அன்னையை மட்டும் இதன் மூலம் அறிய முயன்றால், வாழ்வு யோகமாக மாறும். ஓர் அம்சத்திலாவது, எவரும் அறியாதபடி அன்னையை அறிய முடியும். வாழ்வை ஆழ்ந்து அனுபவித்தவர் இவ்வளவு கொடுமையுண்டா என வியந்ததுண்டு. அவர் அன்னையை அது போல் ஆழந்தறிய முயன்றால், இந்த அளவு கருணை சிரித்தேயறியாதவர்க்குண்டா? பட்டுப் போகும் நிலையிலுள்ள மரத்தில் இத்தனை ஜீவன் மறைந்துள்ளதா? ஒரு பட்டுப் போகும் மரம் எந்த மனிதரும் காட்டாத பரிவைக் காட்ட முடியுமா? எனக் காண்பார்.

> உள்ளத்தில் உறையும் ஆப்த நண்பன் பெரும் துரோகத்தை விரும்பி
> செய்யும்பொழுது, அந்தரங்கம் நடுங்கும். ஆன்மீகம் என்ன சொல்கிறது

என அவரால் கேட்க முடியுமானால், அந்த நேரம் துரோகத்தை விட்டு விலகி ஆன்மீகத் தெளிவு பெற மனம் விரும்பினால், மூலையில் தூசி படிந்துள்ள பெரிய சுத்திக்கு மனித குலத்திற்கில்லாத பெருங்கருணை பூரித்திருப்பது கண்ணுக்குத் தெரியும். துரோகம் எரிச்சலைத் தருகிறது. நிலைதவறி மூர்ச்சையடைவது இயல்பு. அது அனைவரும் செய்வது. ஆன்மா விழிப்படைந்தால் பரம எதிரி. உன்னை ஒழித்துக் கட்டுவேன் என சபதம் போட்டு விட்டுப் போனவன் வீடு தேடி வந்து பெரும் பாராட்டைப் பெற்றுத் தருவதைக் கண்ட பின்னும் நம்ப முடியாது. ஐம்பது வருஷ அனுபவம் பெரியது, அறுபது வருஷ அனுபவம் மிகப் பெரியது. ஆனால் நம் அனுபவத்தைக் கருதாது, சூட்சுமமாக வாழ்வைக் கவனிக்க முயன்றால், வாழ்வு கூறும் ஒவ்வொரு செய்திக்கும்

சூட்சும உலகம் பத்து பெரிய செய்திகளை உன் மேல் திணிக்கும் என்று காணலாம். கண்டும் நம்ப முடியாது. நம்புவதெல்லாம் பலிக்கும். மௌண்ட் பேட்டன் அப்படி வைஸ்ராயானார்.

சுயநலமி கண்டது எவரையும் நம்ப முடியாது. ஆபத்து என்பது.
மனம் எதிராக க்ஷணம் மாறி ஜடத்தை விலக்கி, சூட்சுமத்தைக்

கண்டால் உலகம் முழுவதும் உன்னை உயர்த்த பெரு முயற்சி செய்வது தெரியும். தெரிந்தது அடுத்த க்ஷணம் மறந்து போகும். பெரிய நல்ல விஷயங்களை ஜடத்தில் கண்டாலும் நம்ப முடியாது. கோபமாக லாங்பார்னை விட்டு வெளியேறிய காலின்ஸ் தன்னை மணக்க நினைக்கிறான் என ஷார்லோட்டால் நம்ப முடியுமா? அவன் கேட்ட பின்னும் அது விளங்குமா? தன் வெறுப்புக்கு ஆளான டார்சி அவ்வளவு பெரிய சொத்துக்கு தன்னை எஜமானியாக்க நினைக்கிறான் என்ற எண்ணம் லிஸ்ஸிக்கு எழ முடியுமா? அதுவே சூட்சுமலோக உண்மை. பிரதமரை சந்திக்க முடியாத காமராஜ் பிரதமராக முடியும் என நினைக்க முடியுமா?

உலகம் பெரியது, ஊரை விடப் பெரியது, பிரபஞ்சம் எண்ணத்தில்
அகப்படாதது. ஊரும், உலகமும், பிரபஞ்சமும், இறைவனும்
உன் ஆத்மா மீது கருணை மழை பொழிவது ஊனக் கண்ணுக்குத்

தெரியவில்லை என்பதால், அது இல்லை என்றாகுமா? வைகுந்தம் என்பது பரலோகம், சொர்க்கம். மனிதனுக்குக் கிட்டாதது. அது உயிர் பெற்ற ஆன்மீக வரம். உயிரைக் கடந்த மனம் உண்டு. மனத்திற்கு சொர்க்கம் உண்டு. அதை நம் இலக்கியங்கள், இதிகாசங்கள் எழுதவில்லை. அப்படியொன்றுண்டு என அறியலாம் என்று சிவலோகம், வைகுந்தமடைந்தவர் அறியும் நேரம் உண்டு எனச் சுட்டிக் காட்டியுள்ளனர். மனத்தைக் கடந்த மௌனலோகத்திற்கும் சொர்க்கம் உண்டு. ஞான திருஷ்டி அடுத்த கட்டத்திலுள்ளது. அதற்குரிய சுவர்க்கம் உயர்ந்தது. யோக லோகத்திற்கும் தெய்வ லோகத்திற்கும் உள்ள சொர்க்கங்கள் உயர்ந்தவை, உன்னதமானவை. சத்திய ஜீவிய லோகத்திற்குண்டான சுவர்க்கம் பகவான் கூறுவது. அங்கு தீமையில்லை, கொடுமையில்லை, கோரமில்லை. உயர்ந்தது மேலும் உயர்ந்து உன்னதம் பெறுகிறது. அன்னையின் ஸ்பர்சம் எவர்க்கும் அளிக்க விரும்புவது. பூரண சரணாகதியும், முழுமையான உண்மையும் அவற்றைப் பெற்றுத் தரும் என பகவான் தான் பூமாதேவிக்குப் பெற்ற வரத்தைப் பெற்றதைக் கூறும்பொழுது கூறுகிறார். யார் இதையெல்லாம் நம்புவது என நினைத்தால், க்ஷணம் அனுபவித்துப் பார்க்கலாம். அழைப்பு லயம் தரும் வரை தொடர்ந்தால் லயம் அதன் சுபாவத்திற்கெதிராக மேற்சொன்ன சொர்க்க சுகத்தை க்ஷணம் தரும். அதற்கு மேல் ஜீவன் தாங்காது என்பதால் நீடிப்பதில்லை. லயம் அழைப்பின் லட்சணம்.

ஒரு சர்வதேச ஸ்தாபனத்தில் நம் அன்பர் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர். மற்ற உறுப்பினர்களைக் கருதும்பொழுது அன்பருக்கு வயது போதாது. பட்டமில்லை. சர்வதேச அனுபவத்தில் அன்பர் பெற்றது சிறிதளவே. அதன் தலைவர் ஓய்வு பெறும்பொழுது அன்பரை அடுத்த தலைவராக்கப் பிரியப்பட்டார். அது நடைபெறவில்லை. வேறொரு புகழ் வாய்ந்த புரொபசரை தேர்ந்து எடுத்தனர். அவர் புதுத்திட்டம் கொண்டு வந்தார். எல்லோரும் ஆமோதித்தனர். செயல்படுத்த எவரும் முன்வரவில்லை. அன்பர் ஏற்றுக் கொண்டார். ஆனால் தலைவர் திட்டத்தை அமுல்படுத்தவில்லை. ஆறு மாதம் கழித்து அன்பரை தலைவர் விசாரித்தார். "உங்கள் உத்தரவுக்கும் காத்திருக்கிறேன். உத்தரவு கேட்டெழுதிய ஈமெயிலுக்கு பதிலில்லை என்பதால் எடுக்கவில்லை" என்றார். தலைவர் உத்தரவு கொடுத்தார். ஒரு திட்டம் ஐந்து பாகமாக சிறப்பாக செயல்பட்டது. ஆறு மாதம் கழித்து நிர்வாகக் கமிட்டி கூடியது. திட்டம் பரிசீலனைக்கு வந்தது. தலைவர் கோபப்பட்டு "என் உத்தரவின்றி ஏன் திட்டத்தை அமுல் செய்தாய்" எனக் கண்டித்தார். அவர் எழுதிய ஈமெயிலை அன்பர் கமிட்டியிடம் காட்டினார். கமிட்டி அக்கூட்டத்திற்கு வேறொரு சேர்மனை நியமித்து ஒன்பது மணி நேரத்திற்கு திட்டத்தைப் பரிசீலனை செய்து பாராட்டியது. கூட்டம் முடிந்து அனைவரும் திரும்பிய பின் தலைவர் அன்பரைக் கண்டித்தார். "என் உத்தரவின்றி செயல்பட்டது தவறு" என்றார். இது அன்பர் பிரச்சினை. வாழ்வில் உண்டானது என்ன? ஆன்மீகம் என்ன கூறுகிறது.

நான் தவறு செய்யாதபொழுது தலைவர் தவறு என்றால் என் மன ஆழத்தில்
தவறுள்ளது என ஏற்கிறேன். குற்றச்சாட்டை எதிர்த்து பேசாமலிருக்க முடிவு செய்தார்.

தலைவர் நிர்வாகக் கமிட்டியை அவருக்கு வேண்டியவர்களுடன் கூட்டி தன்னை மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுத்து, ஸ்தாபனத்தில் பணமில்லை, உள்ள பணம் செலவானபின் ஸ்தாபனத்தை மூடுவோம் என்று முடிவெடுத்து விட்டார். மற்றவர்கள் கூடி எழுநூறு அங்கத்தினர் அபிப்பிராயத்தைக் கேட்க முடிவு செய்தனர். ஸ்தாபன உறுப்பினர்கள் அடிப்படைத் தேர்தல் (தலைவரை கமிட்டி தேர்ந்தெடுப்பதற்கு பதிலாக எழுநூறு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்க வேண்டும்) நடத்தக் கோரினார். தலைவர் நம் அன்பர் மீது அமெரிக்காவில் கேஸ் போட்டு தேர்தலை நிறுத்த முயன்றார். தேர்தல் நடந்தது. புதுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். கோர்ட் சமரசம் பேச உத்தரவு செய்தது. தலைவர் மறுத்து அப்பீலுக்குப் போனார்.

> அன்பருடைய ஒரே முடிவு: வேலை கொடுத்தால் செய்கிறேன்.
> குற்றச்சாட்டை எதிர்ப்பதில்லை. முடிந்தால் மனதாலும் எதிர்ப்பதில்லை.

தேர்தல், கமிட்டி கூட்டம் நடத்துவது, திட்டம் அமுல் செய்வது, சமரசம் பேசுவது ஆகியவை ஏராளமான வேலைகள். மூன்று அல்லது நான்கு பேர் நாள் முழுவதும் செய்ய வேண்டிய வேலை. வேலை செய்ய எவரும் முன் வரவில்லை. அன்பர் பதினெட்டு மணி நேரமும் வேலை செய்தார். பதவி, பொறுப்பு இல்லை. நிஷ்காம்ய கர்மம். புதுத்தலைவர், புதுக்கமிட்டி நடக்கிறது. நடத்த எவருமில்லை. அன்பர் செய்கிறார். திட்டம் அமுலானதில் பல கருத்துகள், பல செயல்கள் உற்பத்தியாயின. ஒவ்வொரு கருத்தை அமுல் செய்ய ஒருவர் தேவை. வேலை ஏழு அல்லது எட்டு மடங்கு வளர்ந்தது. செய்வாரில்லை. அப்பீல் கோர்ட் மீண்டும் சமரசம் பேசச் சொல்லிற்று. தலைவர் உள்ள பணத்தை வழக்கில் செலவிட்டார். ஒரு வருஷம் கழித்து கேஸை வாபஸ் பெற்றார். ஸ்தாபன வேலைகள், மகா நாடுகள், Newsletter வளர்ந்தன. கடந்த இருபது ஆண்டில் ஸ்தாபனம் ஒரே மகா நாடு நடத்தியது. இந்த இரண்டு ஆண்டில் ஒன்பது மகா நாடுகளை அன்பர் நடத்தினார். கமிட்டி கூட்டங்களை நடத்த அன்பரை சேர்மனாக்கினார்கள். அது அதிகாரமில்லாத வேலை செய்யுமிடம். சொஸைட்டியும் வேறொரு ஸ்தாபன அன்பரும் சேர்ந்து ஒரு 6 monthly journal 6 மாதத்திற்கு ஒரு முறை வரும் பத்திரிகையை ஆரம்பித்தனர். அதை முழுவதும் ஸ்தாபன வேலைகட்கு அளித்தனர்.

> ஸ்தாபனம் பெரு வெற்றி பெற்றது. அன்பர் கமிட்டியிலிருந்தும் ஓய்வு பெறும் நேரம் வந்து விட்டது. உலகின் எல்லா பக்கங்களினின்றும் பாராட்டுகள் வந்து குவிகின்றன.

ஸ்தாபன பழக்கம் எல்லா மகா நாடுகட்கும் உறுப்பினர் வர ஸ்தாபனம் பணம் தரும். உறுப்பினர்கட்கு ஆண்டு சந்தா இல்லை. புதிய திட்டத்தில் உறுப்பினர் சந்தா வருடந்தோறும் $125 செலுத்த வேண்டும். மகா நாடு கமிட்டி கூட்டங்களுக்கு சொந்த செலவில் வர வேண்டும். மீண்டும் கூறினால்,

– வாழ்க்கை கூறுவதென்ன?

என்ன நடந்தது?

– ஆன்மீகம் கூறுவதென்ன?

வாழ்க்கை தான் செய்யாத குற்றத்தை ஏற்காது. வழக்கு வந்தால், வழக்காடும். தன் கட்சி நியாயத்தை எடுத்துச் சொல்லச் சொல்லும். அன்பர் குற்றச்சாட்டை ஏற்கவில்லை. எதிர்க்கவில்லை. மனத்தாலும் முடிந்த அளவு எதிர்க்கவில்லை. தானே முனைந்து (initiative) ஒரு காரியத்தையும் செய்யவில்லை. ஸ்தாபனம் கொடுத்த வேலையை சொந்த செலவில் செய்தார். சேவை ஸ்தாபனம் என்பதால் உறுப்பினர்கட்குச் சம்பளம், சன்மானம் தரும் பழக்கமில்லை. ஆபீஸ், staffக்கு சம்பளம் உண்டு. இந்த இரண்டாண்டில் சொஸைட்டி ஆபீஸ் சேவையாக சர்வதேச நிறுவனத்தின் வேலைகளைச் செய்கிறது. இரண்டு ஆண்டில் அமெரிக்காவில் இந்த ஆபீஸ் செயல்பட மூன்று பேர் வேண்டும். ஒருவருக்கு ஆண்டு சம்பளம் $ 75,000. மூன்று பேருக்கு இரண்டு ஆண்டு சம்பளம் $ 450,000 (2 கோடி ரூபாய்க்கு மேல்). பெரும்பாலான வேலையை அன்பரே செய்தார். ஆன்மீகம் என்ன கூறுகிறது?

> பலனை எதிர்பார்க்காதே. ஆத்ம வளர்ச்சியே பலன்.
> ஸ்தாபனம் வளர்வது நல்லது. அப்பலனையும் எதிர்பார்க்கக் கூடாது.

அறுபது ஆண்டிற்கு முன் ஐன்ஸ்டீன், ரஸ்ஸல் போன்றவர் ஆசியுடன் இந்த ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இது வரை நடந்தவற்றின் தொகுப்பைக் கடந்து இந்த இரண்டாண்டில் ஸ்தாபனம் செயல்பட்டு பிரபலம் பெறும் தகுதி பெற்றது. அன்பருக்கு செலவு, வேலை. ஆத்ம தெளிவு அன்றாட நிகழ்ச்சியாயிற்று. உலகப் பிரமுகர்களில் சுமார் ஐம்பது பேருக்கு மேல் அன்பர் சந்தித்து உலகப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிகளை எடுத்துக் கூறியுள்ளார். அவ்வளவும் பகவானுடைய கருத்துகள். கேட்டவர் கேட்டுக் கொண்டனர். இந்த இருபது ஆண்டில் பகவான் கருத்துகளை இதே ஸ்தாபனத்தில் எடுத்துக் கூற முடியவில்லை.

நாட்டில் பணம் பெருகுகிறது. பணம் குவியுமிடத்தில் அதிகாரம் சேரும். அது உடனுறைபவர்கட்கு. தொந்தரவு, பணம் இயல்பாக அதிகாரம் செய்யும். மிரட்டும். மிரட்டப் பிரியப்படும், பெருமைப்படும். வாழ்க்கை சொல்வதென்ன? பணக்காரனுடன் வம்பு வைத்துக் கொள்ளாதே. பணிந்து போ. செல்வாக்கு இருந்தால் பயன்படுத்து. முடிந்தால் கோர்ட்டுக்குக் போ. பணம் போலீஸை பணத்தின் பக்கம் பேசத் தூண்டும். கோர்ட் பணத்திற்கு ஆதரவு தரும். வேலியே பயிரை மேயும் நாட்கள் இவை. கடந்த நாட்களில் நியாயம் அழியாத காலத்திலும் சட்டம் மெதுவாக செயல்படும். மனிதன் தன் பயத்தைக் கலந்து செயல்படுவான். இவையெல்லாம் உண்மை. ஆன்மிகம் கூறுவதென்ன?

- புறம், அகத்தைக் காட்டுகிறது.
- ஆன்மீக முன்னேற்றம் ஆபத்தைக் கொண்டு வரும்.
- நாம் செய்யாத செயல்கள் அடியே ஏராளமாக தவறிருக்கும்.
- மனத்தின் உள்ளே பயமிருந்தாலும், அதைக் கிளப்ப புறம் 'மிரட்டும்'.
- அன்னை பிரச்சினையுள் வந்துவிட்டால் பிரச்சினை கரையும்.
- அன்னை பிரச்சினையுள்ளும், நம் உள்ளும் வர வேண்டும்.
- வந்தவர் வந்து நிறைய வேண்டும்.
- கடந்த கால செயல்களில் நிச்சயமாக வேர் இருக்கும்.
- சிறிய தவறு இது போன்றது செய்திருப்போம், அல்லது செய்ய நினைத்திருப்போம்.
- கடந்த கால சமர்ப்பணம் கணீரென பலிக்கும்.
- இது ஆன்மீக வாய்ப்பு என்ற நம்பிக்கை மனநிலையை மாற்றும்.
- எப்பொழுது அன்பருக்கு எந்த சிரமம் வந்தாலும் அன்னையை மேலும் ஆழ்ந்து நினைக்க புறம் வற்புறுத்துவதாகப் பொருள்.

அன்பருக்குப் பிரச்சினையில்லை. வாய்ப்புண்டு. வாய்ப்பு பெரும் வாய்ப்பாகும் நிலையுண்டு. பொறாமை காரணமாக தொழிலதிபரை அரசியல்வாதி அழிக்க முயன்று அவருக்கு 18 கோடி நஷ்டம் ஏற்படுத்தினார். அன்பர் பிரார்த்தனையால் அவர் பதவியிழந்தார். க்ஷணத்தில் நடக்க வேண்டியது. மனம் பிரமிப்பாக நினைப்பதால் முப்பது நாளில் நடந்தது. இத்துடன் நஷ்டம் விட்டது என்று தொழிலதிபர் சந்தோஷப்பட்ட பொழுது, இழந்தது வரும் வழியுண்டு என அறிந்து 18 கோடியை திரும்பப் பெற்றார். வாழ்க்கையில் இது போன்ற நேரம் செய்வதை எழுதினால் அது நீளும். ஆன்மீகம் கூறுவதை ஒரே சொல்லில் கூறலாம்.

அன்னையை அழைக்க வேண்டும்

எனலாம். இந்த நேரம் அன்னையை அழைக்கும் சிரமம் வாழ்க்கை அனுபவத்தை விட நீண்ட நூலாகும்படி விரியும். கல்லூரி மாணவன் பரீட்சையில் practical செய்ய வேண்டும். ஐம்பது நடந்துள்ளது. வரப்போவது ஒன்று. லாபரட்டரியில் எந்த apparatus எடுத்து வைக்கிறார்கள் எனத் தெரிந்தால் வேலை சுலபமாகும். உதவி தேடுகிறார் ஒருவர். எந்த தவற்றையும் செய்யாத ஒருவர் உதவியை நாடுகிறார். நாம் தவறு செய்யாமலிருந்தால் போதாது. பிறருக்கும் தவறு செய்ய உதவக்கூடாது, என்ற நிர்ணயமில்லை. உதவினார். இரண்டாண்டு கழித்து பட்டப் பரீட்சையில் இவர் practical செய்யும்பொழுது தெரியவில்லை. ஆசிரியர் இவர் நண்பர். உதவ முன் வந்தார். உதவியை மறுத்தார். Practical செய்யாமல் வந்து பெயிலானார். தவற்றின் சாயலும் கூடாது எனில் கடந்த காலம் நினைவும் வராது. நினைவு வந்தாலும் வராவிட்டாலும் பிரார்த்தனை பலிக்கும்.

இன்று மனம் தவறறியாத தூய்மை பெற்றிருக்க வேண்டும்.

எதையும் செய்யலாம் பிரச்சினையை மறக்க முடியாது. மீண்டும் மீண்டும் மனம் பிரச்சினையை நாடும். “எனக்கு பிரச்சினை மறக்க வேண்டும்” எனப் பிரார்த்தனை செய்தால் பிரச்சினை மறக்கும். வாழ்க்கை சட்டம் பேசும். சட்டம் தவறினாலும் நியாயம் நிலைக்கும். அதுவும் தவறினால் இது தர்மமா எனக் கருதும்.

அனைத்தும் அனைத்தின் பல்வேறு நிலைகள்.
ஆன்மீகத் தீர்வு : மனத்தைக் கடப்பது.

மனத்தைக் கடப்பது என்றால் சிந்தனை நின்று, சொல்லழிந்து, லயம் ஏற்படுவது. இது யோக சித்தி.
என் போன்ற எளியவனுக்கு முடியுமா என்று தோன்றும்.

பெரும் யோக சித்தியையும் எளிய அன்பனுக்குக்
கேட்காமல் கொடுப்பது அன்னை என்று அறியும் வாய்ப்பு.

பிரச்சினை என்றால் என்ன என்று புரிய இந்த தொந்திரவு. விலகிய பின் அது புரிவது யோகம். பிரச்சினை தீர்வது எளியது. அது சிறியது. ஆன்மிகம் கூறுவது.

- பிரச்சினை நிச்சயமாகத் தீரும்.
- அதன் ஆன்மீகக் காரணம் புரிவது முக்கியம்.
- இனி வாழ்வில் இப்பிரச்சினை எழாதபடி இது தீர வேண்டும்.
- பிரச்சினை தீர்வதைவிட process வழிவகை தெரிய வேண்டும்.
- Process வழிவகை தெரிவதை விட மூலம் தெரியவேண்டும்.
- மனம் தன்னைக் கடந்து ஆத்மாவை அடைந்து அதைக் கடந்த மூலத்தை இந்த நேரம் எட்டும். அது பெரிய சித்தி.

ஐரோப்பாவில் இன்று EU வில் 27 நாடுகள் உள்ளன. மேலும் பத்து முதல் பதினைந்து நாடுகள் சேர விரும்புகின்றன. 1945 வரை ஐரோப்பா உலகப் போர்க்களமாக இருந்தது. நூறாண்டுப் போர் நடந்த கண்டம் அது. முன்னூறு ஆண்டுகட்கு முன் போரிலிருந்து தப்ப அரச குடும்பங்கள் ஒரு யுக்தி செய்தனர். திருமண சம்பந்தம் செய்தனர். அது பெரிய யுக்தி. பெண் எதிர் வீட்டிலிருப்பதால் நாடு போருக்குச் செல்வதில்லை. ரஷ்ய ஜார் மன்னர் விக்டோரியா ராணியின் பேரன். இரண்டாம் போர் நடக்கும்பொழுது இங்கிலாந்து அரசன் ஜர்மானிய ராஜ குமாரன். ஜர்மனி இங்கிலாந்தைத் தாக்கியதால் ஜர்மனி சம்பந்தப்பட்டவர்கள் காவலில் வைக்கப்பட்டார்கள். அரசனை என்ன செய்வது? ஸ்பெயின் இங்கிலாந்திற்கு சம்பந்தி. பிரான்ஸ் பல நூற்றாண்டுகளாக உறவு, பெரிய உறவு. திருமண சம்பந்தம் பேரளவுக்குப் பலித்தது. முழுவதும் பலிக்கவில்லை. ஐரோப்பா நூறு ஆண்டாகப் போர்க்களமாக இருந்தது. 1945 முதல் போர் என்பதை நினைக்கவே முடியவில்லை என்று நிலைமை மாறி விட்டது. அன்னை வாழ்வில் வந்த பின் பிரச்சினையை நினைக்கவும் முடியாது. பல அன்பர்கள் “வாழ்க்கையிலேயே பிரச்சினை மறைந்து விட்டதா?” எனக் கேட்டனர். பிரச்சினையின் வகைகள், தீரும் வழிகள்.

1) எளிய பிரச்சினை - சிறு முயற்சியால் தீரும்.
கிராமத்தில் கிடைக்காத பாட்டரியால் கம்ப்யூட்டர் வேலை செய்யாவிட்டால் அப்பாட்டரி டவுனில் கிடைக்கும். பாட்டரி இல்லை என்றால் கிடைக்காது என நினைப்பது பிரச்சினை.

2) கண் பார்வை போனபின் ஆப்பரேஷன் செய்ய பயந்து மறுப்பவர், வேதனை பெரியது.
ஆப்பரேஷன் செய்த பலரைக் கண்டால் பயம் தெளியும்.

3) டாக்டர் படிக்க பணமிருக்கிறது. மார்க் நான்கு குறைந்து இடம் கிடைக்கவில்லை.
பையனுக்கு விளையாட்டு, செஸ், பேச்சுப் போட்டி, தாழ்ந்த ஜாதி, போன்று வேறு தகுதியிருந்தால் மார்க் குறைவதை மீறி இடம் கிடைக்கும்.

4) கேஸ் முடிந்து ஜெயித்தபின் எதிரி வக்கீல் ஒரு முக்கியமில்லாத பத்திரத்தைத் திருடிக் கொண்டு போகிறார். பத்திரம் முக்கியமில்லாவிட்டாலும், இதை இப்படியே விட்டு விட்டால், பின்னர்

இது வழி பெரிய பிரச்சினை உருவாகும் என நினைப்பதால், அது பிரச்சினையாகிறது. 1982இல் நடந்தது. இல்லாத பிரச்சினை எழுந்தால் அது போன்ற வழி மூலம் தீரும் என்பது அன்னை சட்டம். ஜட்ஜ் வக்கீலிடமிருந்து அதை வாங்கி கொடுத்து விட்டார். அந்த கோணத்தில் நினைத்துப் பார்த்தபொழுது

ஓராண்டிற்கு முன் ஜில்லா ஜட்ஜ் தன் மகன் ஆரம்பிக்கும் தொழிலுக்கு உதவி கோரி நம்மிடம் வந்தது நினைவுக்கு வந்தது. அவர் முன் பிரச்சினை எழவில்லை.

5) தொழிலில் சம்பந்தமில்லாத செல்வாக்குள்ள பெண் அனாவசியமாக நம் கம்பனி வேலைகளில் தன்னை தன் சிறு எக்ஸ்போர்ட் சௌகரியத்திற்காக வந்து நுழைந்து விட்டார். வெளிநாட்டு கஸ்டமர் இப்பெண்ணுக்குத் தெரிந்த புரொபசருக்கு வேண்டியவர் என்பதால் நம் கம்பனி வேலைகளில் தலையிட்டு ஆபீசர்களைத் திட்டுவதும், மிரட்டுவதுமாக மாறினார். பெண் செய்யும் அட்டகாசம் பொறுக்க முடியவில்லை. வெளியில் சொல்ல முடியாத நிலை. இரண்டு அல்லது மூன்று ஆண்டு சித்ரவதை.

சம்பந்தப்பட்ட அன்பரின் கவனத்திற்கு வந்தது. இதன் மூல காரணம்
இந்த கம்பனியின் முக்கியஸ்தருடைய குணம் அது என அவருக்குப் புரிந்தது.

புரிந்தால் பிரச்சினை தீரும்

என்பது சில வகைப் பிரச்சினைகட்குண்டு. இது அவ்வகை. அப்படியானால் தீரும் வழி என்ன? பெண் சம்பந்தமற்ற பெரிய மனிதரால் நம்மை அவதிப்படுத்துகிறார் எனில் அதே வழியில் தீரலாம். கம்பனிக்கு தெரிந்த பழைய வாடிக்கைகாரர் ஒரு பெரிய மனிதர். அவர் உதவ முன் வந்தார். அவர் பெண்ணைக் கூப்பிட்டார். போனில் பேசினார். “கம்பனியில் உங்களுக்குத் தேவையான உதவியை என்னைக் கேட்டால் செய்கிறேன்” என்றார். பெண் அவலத்தை மறந்து பெரிய மனிதரைத் தொடர்ந்தார்.

வந்த வழி பிரச்சினை தீரும்.

6) புதிய காலனியில் கல்கத்தாவில் குடி போக வேண்டும். குடிபோனார்கள். வேலையெல்லாம் முடிந்தது. எதிர் வீட்டுக்காரர் மறுநாள் வந்தார். “நேற்று காலனி முழுவதும் தண்ணீர் சப்ளையில்லையே எப்படி விழா நடத்தினீர்கள்” எனக் கேட்டார்.

பிரச்சினையிருப்பதே அன்பருக்குத் தெரியாமல் தீர்ந்தது.
இது Super Grace.

7) அடாவடி மனிதருடன் நெடுநாளைய பகையால் அடாவடிப் பிரச்சினை எழுந்தால்
அது தீராது, தீர்க்க முடியாது. எதற்கும் வழியுண்டு. முன் யோசனை, சமயோசிதம் உதவும்.
அவற்றை உபயோகப்படுத்துவது வழக்கத்திற்கு மாறானது. கூச்சப்படாமல் ஒருவர் contract இல்
எதிர் நிபந்தனையை வழக்கத்திற்கு மாறாக எழுதினார். எதிரிக்கு ஆட்சேபணையில்லை. புரியவில்லை.
ஏற்றுக் கொண்டார்.

6 மாதம் கழித்து பலன் பெறுபவரை அறிந்தவுடன் அடாவடிக்கார்
அடாவடி செய்தார். முன் யோசனை 50,000 ரூபாய் அபராதம்
காண்ட்ராக்டில் எழுதியது அடாவடியைத் தவிர்த்தது.

சர்க்கரை வியாதி இந்த நாளில் சகஜமாய் விட்டது. எந்த டாக்டரிடம் போகலாம், என்ன மருந்து சாப்பிடலாம் என அவரவர் தம் பிரச்சினையை தம் சுபாவத்திற்கேற்பத் தீர்த்துக் கொள்கின்றனர்.

எவருக்கும் அன்னை வழி என்ன என்று கேட்கத் தோன்றுவதில்லை.
நான் எடுத்துக் கொள்ளும் ட்ரீட்மெண்ட் நல்ல பலன் தரவேண்டும்
என்பது அன்பர் நினைவு.

80 வயதில் சர்க்கரை 180 இருப்பது விசேஷம் என ஏற்றுக் கொண்டு பல ஆண்டான பொழுது ஒரு நாள் டாக்டரிடம் போன பொழுது இரண்டு ரீடிங்கும் 280 - 340 என இருப்பது திகிலாயிற்று. டாக்டருக்குப் புரியவில்லை, பிடிபடவில்லை. மருந்து கொடுத்துப் பார்க்கலாம், ரிசல்ட் பார்த்து எந்த மருந்து தருவது என முடிவு செய்யலாம் என டாக்டர் மருந்து கொடுத்தார்.

இதே சமயம் வேறு சந்தர்ப்பத்தால் அன்பருக்கு Blessing Packet வந்தது.
மாதம் ஒரு Blessing அனுப்ப ஏற்பாடாகி அடுத்தது உடனேயும் வந்தது.
அன்பர் Blessings யை பக்தியுடன் ஏற்றார். அதற்கும் சர்க்கரை ரீடிங்கிற்கும்
தொடர்பை மனம் ஏற்படுத்தவில்லை. டாக்டரிடம் போனார். 120 - 180 இருந்தது.
டாக்டருக்கு விளங்கவில்லை. அன்பர் திடீரென பிளசிங் பாக்கெட்டை நினைத்து
அதனால் தான் இவ்வளவு என்று மகிழ்ந்தார்.

அடிப்படையான உண்மை கண்ணுக்கு முன்னால் நின்றாலும் தெரியாது என அன்னை அடிக்கடி கூறுவார். சர்க்கரை வியாதியோ, எந்த வியாதியும் Blessing ஆல் மட்டும் பூரணமாகக் குணமாகும் என்பது அன்னை சட்டம் என நாம் அறிவதில்லை. அறிந்தால் நம்புவதில்லை. உச்சகட்ட அன்பர் ஒருவரிருந்தால் அவருக்கு சர்க்கரை வியாதி வந்தால் sweet யை மருந்தாகக் கொடுத்து குணப்படுத்தலாம் என நாம் வெளியில் சொல்லவும் முடியாது.

- நமது பழைய அனுபவங்களை நினைத்துப் பார்த்து சோதனை செய்து மூலகாரணத்தைக் கண்டு, தத்துவமாக அதை ஆராய்ந்தால் இதே போல் பிரச்சினையை நம் வாழ்வில் தீர்த்தது புரியும்.
- ஆழ்ந்த அன்பர்கட்கும், பெரிய நம்பிக்கையுள்ள பக்தர்கட்கும் எளிய பிரச்சினைகளும் தீராத காரணங்கள் பல:
  - → உறவு, நட்பில் தவறானவர், குறையுடையவர்களை ஏற்றால் அவர்களால் பிரச்சினை தீர்வது தடை படும்.
  - → நீண்ட நாள் அன்பர்கட்கு பிரச்சினை எழுந்தவுடன் அவர்களுடைய பக்தியால் பல தீரும். அவர்கட்கு அன்னை நினைவு வராது. நினைவுபடுத்தினால் இதற்கெல்லாம் அன்னையை எப்படி கூப்பிடுவது என்பார்கள்.

பக்தி உயர்வானால் எந்த சிறிய விஷயத்திற்கும் அன்னையை அழைப்பார்கள் என்ற உயர்ந்த முறையை அனைவரும் அறிந்தாலும் நடை முறையில் அது நினைவுக்கு வருவதில்லை. சர்க்கரைப் பண்டம் சாப்பிட்டு சர்க்கரை வியாதி குணமாகும் என்பதை நம்ப முடியாதவர் அனைவரும் இதை சவாலாக ஏற்றால் பலன் எதிராக இருக்கும். அந்த ஐயம் ஏற்பட்ட அன்பர் தனக்குத் தெரிந்த அன்பர்கட்கு தீர்ந்த பிரச்சினைகளைக் கண்டு, விபரம் சேகரம் செய்து, ஆராய்ந்து பார்த்தால் பல அதுபோல் தீர்ந்ததைக் காணலாம்.

- அன்பர் அனுபவத்தில்
  - → யானை வாயில் போன கரும்பு திரும்பி வந்துள்ளது.
  - → ஆபத்தான இடத்தை ஆதரவு தருமிடமாகக் கருதி சிக்கலில் மாட்டிக் கொண்டவர் மீண்டார்.
  - → சென்ட்ரல் கல்வி மந்திரி முயன்று தர முடியாத வேலை பத்து சந்தா வசூலிக்க முயன்றதால் கிடைத்தது.
  - → பாங்க அதிகாரிகள், உள்ளூர் மக்கள், அனுபவசாலிகள், தொழிலில் ஊறியவர், பலன் பெறுபவர் உள்பட இக்காரியம் நடக்காது என்று ஒரு மனதாக நம்பி கூறியபின், அந்த காரியம்

100% வெற்றிகரமாக
வழக்கத்திற்கு மாறாக
நடந்து நிறைவேறியது.

40 ஆண்டிற்குப் பின் அனுபவம். அதன் பிறகு
அந்த அனுபவம் மீண்டும் மீண்டும் வருகிறது.

ஆன்மீகத்தில் பிரச்சினையை வாய்ப்பாகக் கருதுகிறோம். பிரச்சினை என்ற கருத்தை மனதில் இடம்பெற அனுமதிப்பதில்லை. பிரச்சினை வாய்ப்பாக மாறுவது திருவுருமாற்றம். இதன் மார்க்கம் ஆன்மா செயல்படும்

வகை. வாழ்வு கூறுவது அனுபவத்தின் அடிப்படையில் கூறுவது. ஆரம்பத்தில் அதைப் பட்டியலாக எழுதினோம். ஆன்மீகம் கூறும் பட்டியலும் எழுதப்பட்டது. இது அன்பர்கள் அறிவது. இதில் எந்த ஆச்சர்யமுமில்லை. இருந்தாலும், சற்று நிதானித்து யோசனை செய்தால், செய்வதை ஆராய்ந்தால், செய்யாததை ஆராய்ந்தால், ஒரு

பெரிய உண்மை வெளிப்படும்.
அது எளிய உண்மையாக இருக்கும்.

நல்லதோ கேட்டதோ, சரியோ தவறோ நாம் ஊரை எதிர்த்துப் போகக் கூடாது என்பது அனைவருடைய ஆழ்ந்த முடிவு.

அது பெற்றோர் மீது பாசமாக, பிள்ளைகட்காக ஏற்கும் கடமையாக, கெட்ட பெயர் பெறக்கூடாது என்பதற்காக, “தர்ம நியாயத்திற்காக” செய்வதாகத் தெளிவாகத் தோன்றும்.

உண்மையில் உண்மை பேச, உண்மையாக நடக்கப் பயப்படும் சுபாவமே அது.

மனிதன் தன்னைப் பயந்தவனாக அறியப் பிரியப்பட மாட்டான். அது அவனுக்கே மனம் புண்படும் செயல். எதையும் மனிதன் மறந்து விடுவான், மன்னித்து விடுவான். ஆனால் “நான் ஏமாந்து விட்டேன், ஏமாற்றப் பட்டேன், என்னை ஏமாற்றியவர்கள் என்னை விடக் கெட்டிக்காரர்கள்” என்ற கருத்தை மனம் ஏற்காது. அது மனத்தைச் சுடும், சுட்டுப் பொசுக்கும். முழுமையாக ஏமாறும் முதலாளியும் “என்னை இளித்தவாயன் என நினைக்கிறாயோ?” என அனைவரையும் கேட்பான். அதுவே உண்மை எனப் புரியும் வரை அவன் பிரச்சினை தீராது.

அன்பனான பின்னும் அம்மன நிலை மாறாது. ஏமாற்றுபவர் உலகில் திறமைசாலிகள். பணம் வாங்காத அதிகாரி குலதெய்வப் பிரசாதம் பெற்றால் மகிழ்வார். அசகாய சூரன் எனப் பெயர் வாங்கியவன் குடும்பப் பெருமையைப் பேசுபவனிடம் காது கொடுத்துக் கேட்பான். அவனை ஏமாற்ற முயல்பவன், “என் முதலாளியிடம் அவர் ஜாதி, குடும்பத்தைப் போற்றிப் பேசினால் மகிழ்ந்து போவார்” எனக் கண்டு கொண்டிருப்பான். அவனுக்குத் தேவைப்பட்ட நேரம் அந்த ஆயுதம் பயன்படும். முதலாளி ஒரு பெண்ணை விரும்பி இழந்துவிட்டார் என்பதை அறியும் கணக்குப் பிள்ளை அவர் தனியாக இருக்கும் நேரம் அவரிடம் வருவான். உட்காரச் சொன்னால் உட்கார மாட்டான். பெஞ்சில் உட்காரச் சொன்னால் தரையில் உட்காருவான். முதலாளி மனம் நெகிழ்ந்து விடும். நேரடியாக அப்பெண்ணைப் பற்றிப் பேசாமல் அந்த நாட்களைப் பற்றி பேசுவான். முதலாளியே அந்த விஷயத்திற்கு வந்தால் அனுதாபம் தெரிவிப்பான். பத்து ஆண்டு இப்படி முழுக்க முழுக்க உரிமையுடன் ஊரார் முழுவதும் அறியும்படி திருடிப் பணக்காரனானான். பத்து ஆண்டிற்குப் பின் தற்செயலாக கணக்குப் பிள்ளை குட்டு உடைந்து திருடு நின்றது.

பிரச்சினைக்குரியவர் பிரச்சினைக்கு உடந்தையாக இருந்தால் பிரச்சினை தீராது. அன்பர் நிலை இங்கும் வேறு. இப்படி நஷ்டம் வந்தாலும், எவர் மூலமாக நஷ்டம் வருகிறதோ அவர் மூலமாகவே பத்து மடங்கு வசதி செய்ய வாழ்வால் முடியும் என்பதால் அன்னை வாழ்வு மூலம் செயல்பட்டு அற்புதம் நிகழ்த்துவார்.

வாழ்வைக் கடந்து இயற்கை மூலமாக நடப்பதை ததாஸ்து என்கிறார்.

இயற்கையைக் கடந்து பிரம்மம் மூலமும் நடக்கும் என்பது இரண்டாம் உலகப் போரையும் இந்திய சுதந்திரத்தையும் பெற்ற வழி. அதன் பிறகு க்யூபா, சைனா, கொரியா நெருக்கடிகள் அன்னை எவருமறியாமல் தீர்த்தது அவ்வழி.

Morris Good man செய்தது அற்புதம். மனம் விழித்து ஆன்மாவின் சக்தியால் உடலைக் குணப்படுத்தியது. அதன் பின்னிருந்து செயல்பட்டது அன்னை சக்தி. Life ஆசிரியர் 50 ஆண்டிற்கு முன் பென்சலீன் ஷாக்கிலிருந்து தப்பியதை அன்னை குறிப்பிட்டுப் பேசினார். ஆன்மிகம் பெரியது. அன்னை வழங்குவது.